Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம்௵ மார்ச்௴ 29உ, சனிக்கிழமை. [இதழ் ந. 2.

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் ஆகாய விமானப் போர்.

ஜெர்மன் தலைநகராகிய பர்லின், பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையால், சென்றவாரம், நன்றாக வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. போட்ட இடங்களில் நெருப்பை உண்டாக்கும் 10,000 வெடிகுண்டுகள் சரமாரியாக பர்லின்மேல் போடப்பட்டதால், அநேக இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டு எரிந்தது. மிகப்பளுவான வெடிகுண்டுகளும்கூடப் போடப்பட்டன. அவைகள் எந்தெந்தக் குறிகளை நோக்கிப்போடப்பட்டனவோ, அந்த இடங்களின் மத்தியில் விழுந்து, வெடித்து சேதம் விளைவித்தன. ஒரு பெரிய பிரிட்டிஷ் வெடிகுண்டு படை பர்லினைக் கடந்து சென்று மறுபடியும் பர்லினைத்தாண்டி திரும்பியது; அந்நகரிலுள்ள முக்கியமான லட்சியங்களின்மேல் வெடிகுண்டுபோட்டது. முதலில் செல்லும்போது போட்ட குண்டுகளால் உண்டான நெருப்பைக் குறியாக வைத்துக்கொண்டு, அங்கெல்லாம் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டன. அந்தர் தான்லிண்டன் என்ற பிரதேசத்தில் ஐந்து முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்கள்மேலும் குண்டுகள் விழுந்தன.

இந்த வெடிகுண்டு மழைபெய்தது சென்ற ஞாயிற்றுக்கிழமைதான். இது 38-வது தடவையாகும். ஜெர்மன் ரேடியோவில், இந்த விமானத்தாக்குதலைப்பற்றிக் கூறப்பட்டது. பிரிட்டிஷ் விமானங்கள் பர்லின்மேல் சில நெருப்பு குண்டுகளைப்போட்டதாகவும், அதனால் பலர் காயமடைந்து சிலர் உயிரிழந்தார்களென்றும், வடக்கு ஜெர்மனியில்கூட பிரிட்டிஷ் விமானங்கள் பிரவேசித்திருக்கின்றனவென்றும், அறிவிக்கப்பட்டது. வடமேற்கு ஜெர்மனியிலும் வெடிகுண்டுகள் போடப்பட்டதாக லண்டனில் தெரியவருகிறது. இதற்குமுன் அநேகதடவை பர்லின்மேல் வெடிகுண்டு போட்டு அனுபவம்பெற்ற பிரிட்டிஷ் விமான ஓட்டிகளும், போலந்தைச்சேர்ந்த விமான ஓட்டிகளும், பர்லினைத் தாக்கியதில் பங்கெடுத்துக்கொண்டார்கள். அவர்கள் போட்ட பெரிய வெடிகுண்டுகளில் சில ஜெர்மன் தொழிற்சாலைகள் மேல் விழுந்து அங்கு பெரிய வெளிச்சத்தை உண்டாக்கின

பர்லினிலிருந்து திரும்பி வரும்போது ஹனோவர் என்ற ஜெர்மன் நகரத்தில் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகள் போட்டன. அங்கு பலமாக வெடிக்கத வெடிகளின் ஒளியை பர்லின்மேல் வெடிகுண்டு போட்டுக்கொண்டிருந்த வேறு விமான ஓட்டிகள் பார்த்தார்களாம்! ஹனோவர் என்பது ஜெர்மனியின் முக்கியமான ரெயில்வே ஜங்ஷன். இதல்லாமல், கீல் என்ற ஜெர்மன் கடற்படையின் முக்கிய ஸ்தானமும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. பர்லின், கீல், ஹனோவர் என்ற இந்த மூன்று நகரங்களை ஆகாயவிமானங்கள் தாக்கியது மிகவும் வெற்றிகரமான பலன்களைக் கொடுத்திருக்கிறது என்று பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையின் அறிக்கை கூறுகிறது. ஜெர்மன் கடற்படை ஆரம்பஸ்தானமொன்றைத் தாக்கியதால் உண்டான பெரு நெருப்பு வெளிச்சம், பிரிட்டனின் கரையோரத்திலிருந்து தெரிந்தது என்று இந்த அறிக்கை கூறுகிறது. இந்த விமானப்போரில், ஒரு பிரிட்டிஷ் விமானத்தின் தகவல் தெரியவில்லை என்றும் ஹாலந்து கரையோரத்தைத் தாக்கிய இரண்டு விமானங்கள் திரும்பிவரவில்லை என்றும் தெரிகிறது.

சேர்போர்க் என்ற கப்பல் தங்குமிடத்தை, பிளென் ஹீம் வெடிகுண்டு விமானமொன்று தாக்கியது; பிறகு துறைமுக வெளியில், லேசான பீரங்கித்தளத்தைத் தகர்த்தவிட்டது; சேர்போர்க்குக்கு அருகிலுள்ள ஹார்ப்ளர் என்ற ஊரின் பெரிய தெருவில் சிப்பாய்கள் வசிக்கும் சாலைக்குவெளியில் காலை உணவிற்குமுன் 'டிரில்' அல்லது தேகப்பயிற்சி செய்துகொண்டிருந்த ஜெர்மானியத் துருப்புகளை இந்த ஆகாயவிமானம் யந்திர பீரங்கியினால் இடைவிடாது சுட்டு வீழ்த்தியது.

பிரிட்டிஷ் ஆகாயவிமானப்படையின் தாக்குதல்களினால், ஜெர்மனியிலுள்ள ஜனங்கள் பயத்தினாலும், அதிர்ச்சியினாலும், உடல்நலங்குன்றியிருக்கிறார்கள். திடுக்கிட்டதால் அதிர்ச்சியுற்ற நரம்புகளைச் சாந்தப்படுத்த, பலவிதமான மயக்கந்தரும் வஸ்துக்களை உபயோகிக்கிறார்கள். இது ஜெர்மன் அரசாங்கத்தாருக்கு மிகுந்த கவலையை உண்டாக்கியிருக்கிறது. ஜெர்மனியின சுகாதாரத் தலைவர், டாக்டர் லியோனார்டோ கொண்ட்டி என்பவர் சமீபத்தில் வீமார் என்ற இடத்தில் கூடிய ஜெர்மன் சுகாதார சங்கங்களின் மகாநாட்டில் இதைபபற்றிக் கூறியிருக்கிறார். இம்மாதிரி மயக்கந்தரும் மருந்துகளை விற்பவர்கள் கூடியசீக்கிரம் தண்டிக்கப்படுவார்களென்றும், அதற்காக ஒரு சட்டம் செய்யப்படுமென்றும் அறிவித்தார். கஞ்சாவை துர்ப்பிரயோசனம் செய்தது தடுக்கப்பட்டதென்றும், உபயோக மில்லாத மயக்க வஸ்துக்களினால் கடைசியில் ஜனங்களுடைய தேக சௌக்கியம் கெட்டுவிடுமென்றும் அவர் கூறினார். இதனால் ஜெர்மனியர்களுடைய தேக சௌக்கியம், பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்களினால் எவ்வளவுதூரம் கெட்டுவிட்டதென்று தெரிகிறது என்று அமெரிக்க நிருபர் "டெய்லி டெலிகிராப்" என்ற பிரிட்டிஷ் பத்திரிகைக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்.

ஜெர்மன் ஆகாய விமானப்படை, பிரிட்டனில் பிளிமத் என்ற இடத்தை, சென்றவாரம், தாக்கியுள்ளது. நெருப்புக் குண்டுகளையும், பலத்த வெடிகுண்டுகளையும் அதிகமாக இந்த பட்டணத்தின்மேல் போட்டது. 20 அல்லது 30 ஆயிரம் நெருப்புக்குண்டுகளும், நூற்றுக்கணக்கான பெரிய வெடிகுண்டுகளும் போடப்பட்டன என்று தெரிகிறது. மிஸ்டர் மென்சிஸ் என்ற ஆஸ்திரேலியாவின் முதன் மந்திரி, வெடிகுண்டுகளால் தாக்கப்பட்ட இடங்களை, கொஞ்சங்கூட பயமில்லாமல், சுற்றிப்பார்வையிட்டார். பெண்களும், குழந்தைகளும் இந்த இடங்களைவிட்டு வேறிடங்களுக்குப் போவதற்குத் தன்னுடைய மோடார் வண்டியைக் கொடுத்தார். நெருப்பணைக்கும் படையினரைப்பற்றியும், பொதுஜனங்கள், போலீஸ்காரர்கள் இவர்களைப்பற்றியும், அவர்கள் தைரியமாக, உறுதியாக, தங்களுடைய கடமைகளைச் செய்து வருவதைப்பற்றியும் பாராட்டி மிஸ்டர் மென்சிஸ் பேசியிருக்கிறார்.

பிளிமத்தின்மேல், ஜெர்மன் விமானங்கள் போட்ட வெடிகுண்டுகள் பெருத்த சேதத்தை உண்டாக்கியிருக்கின்றன. மூன்று மாதா கோவில்கள் அழிக்கப்பட்டன; இரண்டு ஆஸ்பத்திரிகள் சேதமடைந்தன. ஒன்றில், பிரசவ பகுதியிலும், குழந்தைகள் பகுதியிலும் வெடிகுண்டுகள் விழுந்தன. அப்போதுதான் ஒரு பிரசவம் நடக்கும் சமயம். டாக்டரும், நர்சுகளும் பிரசவிக்கும் பெண்ணை வேறிடத்துக்குக் கொண்டுபோனதும் சுகப்பிரசவம் ஆயிற்று. தாயும், குழந்தையும் சௌக்கியமாயிருக்கிறார்கள். குழந்தைகள் பகுதியில் விழுந்த வெடிகுண்டினால், அநேக குழந்தைகள் இறந்தன. இறந்த சிறு குழந்தைகளை ஒரு போலீஸ்காரன் வெளியே எடுத்துக்கொண்டு போனபோது, அங்குள்ள ஜனங்கள் அக்காட்சியைக்கண்டு பெரிதும் வருந்தினார்கள்.

துக்கு சில மைல்கள் மேற்கில் அகப்பட்டன. ஒரு கப்பலில் நெருப்புப்பற்றிக்கொண்டது. மற்றொரு கப்பல் வெடிகுண்டுபட்டு, மிகப் பழுதாய்விட்டது. 'கான்வாய்' துணைக்கப்பல்கள் யந்திர பீரங்கிகளால் தாக்கப்பட்டன.

பால்ட்ரம் என்ற ஜெர்மன் தீவில் இருந்த தொழிற்சாலைக் கட்டடங்கள் பிரிட்டிஷ் வெடி குண்டுகளால் பழுதாக்கப்பட்டன.

ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட டென்மார்க்கு பிரதேசத்தில், ரயில்வேக்களும், இரண்டு 'ரேடியோ' நிலயங்களும், வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

இந்த சண்டைகளில், இரண்டு ஆகாய விமானங்கள் திரும்பிவரவில்லை.

நார்வேயிலுள்ள ஒரு ஆகாய விமானச்சாலை தாக்கப்பட்டு தகர்க்கப்பட்டது.

சென்ற வாரத்தில், ஜெர்மன் ஆகாய விமானங்கள், பிரிட்டனில் சில பாகங்களைத் தாக்கின. கிழக்கு ஆங்கிலியா, தெற்கு, கிழக்கு, வடகிழக்கு இங்கிலாந்து—இந்தப் பாகங்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

மார்ச் மாதத்தில் 100 ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனில் சுட்டு வீழ்த்தப்பட்டனவென்றும், அவைகளில் 75 இரவில் வீழ்த்தப்பட்டனவென்றும் கணக்கெடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏப்ரல்மீ 26-ந்தேதியோடு முடிவான வாரத்தில் 13 ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனில் சுட்டுவீழ்த்தப்பட்டன. அவைகளில், 'பாம்பர்' என்ற வெடிகுண்டு விமானங்கள் பதினொன்று.

பிளிமத் என்ற தென்மேற்குக் கடற்கரைப் பட்டணத்தை, ஜெர்மன் விமானங்கள் தாக்கி, நாசமாக்கிவிட்டன. விமானத் தாக்குதலுக்குப் பிறகு, கப்பற்படையின் மந்திரி, மிஸ்டர் ஏ. வி. அலெக்சாந்தர் அந்தப்பட்டணத்தைப் பார்வையிட்டார். அவரை வரவேற்ற பிளிமத்தின் 'மேயர்,' லார்டு ஆஸ்டர், "இருதயத்தில் துக்கமும், இதழ்களில் புன்சிரிப்பும், கண்களில் நம்பிக்கையும் உள்ள மக்களைக் காண்பீர்கள்" என்று கூறினார்.

மர்சிசைட் என்ற பாகமும் சென்றவாரம் தாக்கப்பட்டது. டோவர் ஜலசந்தியிலும், இங்கிலாந்தின் தென்கிழக்கு கரையோரத்திலும், ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டன.

ஸ்காட்லந்தின் வடகிழக்குக்கரையிலும், இங்கிலாந்தின் கிழக்கு, வடகிழக்குக்கரைகளிலும், வெடிகுண்டுகள் வீசப்பட்டன. கொஞ்சம் சேதமேற்பட்டது.

போர்ட்ஸ்மத் என்ற தெற்குக் கடற்கரைப்பட்டணம் ஜெர்மன் விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது. பெருத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இரண்டு ஆஸ்பத்திரிகள் மீது அக்கினிக் குண்டுகள் போடப்பட்டன; பிறகு வெடி குண்டுகள் விழுந்தன. ஆஸ்பத்திரிகளில் அநேகர் உயிரிழந்தார்கள்.

ஜெர்மன் ஆகாய விமானங்கள் பிளிமத்தைச் சென்ற செவ்வாய்க்கிழமை, பலமாகத் தாக்கின. அதிகமான உயிர்ச்சேதம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. எட்டு ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

சென்ற மார்ச்சுமீ வரை, பிரிட்டனில், வெடிகுண்டுகளால் இறந்தவர்கள் 29,000; காய மடைந்தவர்கள் 40,000, என்று பிரிட்டிஷ் சுகாதார மந்திரி மிஸ்டர் எர்னெஸ்ட் பிரௌன் அறிவிக்கிறார்.

சென்ற புதன்கிழமை இரவு, பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் மீண்டும் ஜெர்மனியின் முக்கியமான நகரங்களாகிய கீல், பர்லின், ஹாம்பர்க், எம்டன் முதலிய இடங்களைத் தாக்கின.

நார்வேயிலுள்ள 50 விமான ஓட்டிகள் ஸ்வீடன், ரஷ்யா மார்க்கமாகத் தப்பித்துக்கொண்டு, பிரிடிஷ் ஆகாய விமானப்படையில் சேருவதற்குச் செல்கிறார்கள்.

ஏப்ரல் மாதம் பிரிட்டனுக்கும், அச்சுநாடுகளுக்கும் ஏற்பட்ட ஆகாய விமான நஷ்டங்களைப்பற்றி, பிரிட்டிஷ் விமான மந்திரி சபை ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் பின்வரும் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

பிரிட்டனில் நஷ்டம்:—அச்சு விமானங்கள் 112, பிரிட்டிஷ் விமானங்கள் 3.

ஜெர்மனியில் நஷ்டம்:—அச்சு விமானங்கள் 18, பிரிட்டிஷ் விமானங்கள் 106.

மத்திய கிழக்குப் பிரதேசம்:—அச்சு விமானங்கள் 255, பிரிட்டிஷ் விமானங்கள் 61.

### 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

வடக்காப்பிரிக்காவில், பிரிட்டிஷார் கையிலிருக்கும் தோப்ருக் என்ற இடத்தை ஜெர்மானியர் எதிர்க்கிறார்கள். பிரிட்டிஷ் துருப்புகள், அவர்களைப் பின்னோக்கிச் செல்லும்படி தள்ளுகின்றன. பகைவர்களுக்குப் பலத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு ஆபீசர்களும், 125 கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். ஜெர்மனிக்கு 21 ஆகாய விமானங்கள் நஷ்டம்.

அபிசீனியாவில், தெஸ்ஸி என்ற இடத்தருகில் நடந்த சண்டையில், பகைவர்களுடைய சேனையில் அநேகர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். தெஸ்ஸி சண்டையில், 200 இத்தாலியர்கள் உயிரிழந்தார்கள்; 560 ஆப்பிரிக்கர்கள் கைது செய்யப்பட்டார்கள். இன்னும் 300 பேர் கைது செய்யப்படுவார்கள்.

அட்டிஸ் அபாபாவுக்கு வடமேற்கில், 112 பகைவர்களின் சிப்பாய்கள் கைதியானார்கள்.

அபிசீனியாவின் பலபாகங்களில், சக்ரவர்த்தி ஹெயிலி செலாசியின் கொடி பறக்கிறதென்றும், இத்தாலிய நாணயமாகிய 'லிரா' வுக்குப்பதிலாக எதியோப்பிய 'டாலர்' நாணயம் வழங்கி வருகிறதென்றும் தெரிகிறது.

சிம்மா பிரதேசத்தில், இத்தாலிய உள்நாட்டுத் துருப்புகள் வீடுகளைக் கொளுத்திவிட்டு, கொள்ளையடிக்கின்றன.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பென்காசியைப் பலமாய்த் தாக்கின. ராணுவக் கட்டடங்கள்மேல் விழுந்த வெடிகுண்டுகள் நெருப்பை உண்டாக்கிவிட்டன. பென்காசிக்கு 18-மைல் தூரத்திலுள்ள எலியார் கப் என்ற இடத்தில் இருந்த 'கான்வாய்' கப்பலை வெடிகுண்டுகளாலும், யந்திர பீரங்கிகளாலும் தாக்கின.

டியூக் ஆப் அயோஸ்டா என்ற இத்தாலியத் தலைவர் பிரிட்டிஷ் துருப்புகளுக்குச் சரணமடையாததற்குக் காரணம், ஜெர்மனியின் கட்டாயமான தடைதான் என்று தெரிகிறது.

சென்ற வாரம் அச்சுப்படைகள், எகிப்தைத் தாக்கி, லிபியாவிலிருந்து எகிப்தின் எல்லையைத் தாண்டிவிட்டன. சோலம் என்ற இடம் பகைவர்களால் கைப்பற்றப்பட்டது.

அபிசீனியாவில், இத்தாலியின் முக்கிய பட்டணமாகிய தெஸ்ஸி பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டது.

கிழக்கு மத்தியதரைக் கடற்பிரதேசத்தில் பிரிட்டனுடைய நிலைமை உறுதியான பலம் பொருந்தியதாயிருக்கிறது என்று மாஸ்கோ (ரஷ்யா) 'ரேடியோ' கூறுகிறது.

அபிசீனியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் முன்னேறிச் செல்கின்றன. இத்தாலியின் உள்நாட்டுப் படைகள் பல, அபிசீனியச் சக்ரவர்த்தியிடம் வந்து சேர்ந்து கொண்டன. அச்சுத் துருப்புகள் சோலம் என்ற இடத்தில் தொந்தரவு செய்யப்பட்டன. பென்காசி, பெனினா, இவைகளின் மேல் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்காவின் கப்பற்படை மந்திரி, கர்னல் நாக்ஸ் என்பவர், பிரிட்டனுக்கு உதவி செய்வதைக் குறித்து வாஷிங்டனில் நடந்த ஒரு விருந்தில் பேசியிருக்கிறார். அவர் கூறியதாவது: "அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் சாமான்களும், உணவுப் பொருள்களும், இங்கிலாந்துக்குச் செல்வதை ஹிட்லர் அனுமதிக்க முடியாது. அப்படி அனுமதித்தால் ஹிட்லர் தோல்வியடைவது நிச்சயம். அட்லாண்டிக் கடலில் நம்முடைய சாமான்கள் முழுகடிப்பதை நாம் அனு

மதிக்க முடியாது; அனுமதித்தால் நாம் தோற்றுப்போவோம். பிரிட்டனுக்கு உதவிசெய்வதாகச் செய்த வாக்குறுதியை நாம் முழுவதும் காப்பாற்றவேண்டும். சாமான்கள் இங்கிலாந்துக்குச் செல்லும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்வது நம்முடைய பாதுகாப்புக்காகச் செய்யவேண்டிய அவசியமான காரியம். இது நம்முடைய யுத்தம்.” அமெரிக்க உள் நாட்டு மந்திரி, மிஸ்டர் கார்டல் ஹல் என்பவரும் இதே மாதிரி பொருள்படும்படி ஒரு ‘ரேடியோ’ பேச்சில் கூறியிருக்கிறார். மிஸ்டர் வெண்டல் வில்கியும் இதை ஆதரித்திருக்கிறார். கூடிய சீக்கிரம் ‘கான்வாய்’ என்ற உதவித் துணைக் கப்பல்கள் அனுப்புவது சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கத்தார் ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று தெரிகிறது.

“ரிபப்ளிக் தண்டர் போல்ட்” என்ற புதிய ஆகாய விமானம் அமெரிக்காவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. லேசான வெடிகுண்டு விமானத்தைப்போலிருக்கும் இந்த விமானம். 2,000 குதிரைப் பலமுள்ள எஞ்சினுடையது. சுடுவதில் ஒரு ஆள் கொண்ட எந்த ஐரோப்பிய விமானத்தைவிட சிறந்தது.

அட்லாண்டிக் சண்டையில் அமெரிக்கா செய்யும் பேருதவியைப் பாராட்டி பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஏகாதிபத்திய மக்களுக்குச் செய்த ‘ரேடியோ’ பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். “இந்த யுத்தத்தில் வெற்றி பெறவேண்டுமானால், பிரிட்டிஷ் தீவை ஹிட்லர் படையெடுத்துப் பிடிக்கவேண்டும்; இல்லாவிட்டால், கடலின் மூலமாக நம்மை அமெரிக்காவோடு சேர்த்திருக்கும் நமது உயிர்க் கயிற்றை அறுக்கவேண்டும்” என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார். இவை இரண்டும் நடக்காத சம்பவங்கள் என்பதை விளக்கிக்காட்டினார்.

பிரிட்டன் இந்த யுத்தத்தில் முன்னமேயே தோற்றுவிட்டது என்று கூறிய கர்னல் லிண்ட்பர்க்கை விமானப்படைச் சேவைக்குக் கூப்பிடப் போவதில்லை என்று பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் கூறினார். அதன் பின் கர்னல் லிண்ட்பர்க் தம்முடைய ஆபீசர் உத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டார்.

## 4. கிரீஸ்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் பகைவர்களுக்கு சேதத்தை விளைவித்துக்கொண்டே பின்னேக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை கிரீசின் தலைநகரான ஏதன்ஸ்ஸில் பிரவேசித்து தலைநகரின் கோட்டையின்மேல் காலை 10-மணிக்கு ஜெர்மானியக் கொடியை நாட்டினார்கள்.

கிரேக்க முதன் மந்திரி மிஸ்டர் சோடிராஸ் என்பவர் கிரீட் தீவில் செய்த பிரசங்கத்தில் கிரேக்கர்கள் சுதந்தரத்துக்காகப் போராடிய வீரத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது: “ஐரோப்பாவிலுள்ள சுதந்தரமக்களுக்கு கடைசியான, ஆனால் பூரணத் தகுதிவாய்ந்த, அரண்களாக இருக்கும் பாக்கியம் இரண்டு தீவுகளுக்குக் கிடைத்தது. பிரிட்டிஷ் தீவும் கிரேக்கத்தீவுமே அந்த அரண்கள். சிறுநாட்டு மக்களாகிய கிரேக்கர்கள் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஆறுமாத காலம் போராடி கடைசியில் தோற்றுவிட்டார்கள். இருந்தபோதிலும் போர்முடியவில்லை. கிரீட்டிலிருந்து ஜெர்மானியர் முன்னேற்றம் தடுக்கப்படும். கூடியசீக்கிரம் நாங்கள் ஏதன்ஸ்ஸுக்குத் திரும்பிவந்து கிரீசின் சுதந்தரத்தை நிலைநாட்டுவோம்.”

கிரீசினுடைய வர்த்தகக் கப்பற்படை முழுவதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு ஒப்படைக்கப்பட்டது. லட்சக்கணக்கான டன் கப்பல்கள் ஒப்படைக்கப்பட்ட விவரத்தை எகிப்திலிருக்கும் கிரேக்க ஸ்தானீகர் கைரோவி வெளியிட்டார்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில், கிரீசைப்பற்றிய தீர்மானம் ஒன்று இந்த வாரத்துக்குப் பிறகு கொண்டுவரப் போவதாக முதன் மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் அறிவித்தார். “கிரீசுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உதவியனுப்பியதைப் பார்லிமெண்டு அங்கீகரிப்பதாகவும் மத்திய கிழக்கரங்கத்திலும் இதர போரரங்கத்திலும் அரசாங்கத்தார் நடத்தும் யுத்த முறைகளில் பார்லிமெண்டுக்கு நம்பிக்கையிருக்கிறது”—என்பதுதான் அந்தத் தீர்மானம்.

கிரீசிலிருந்து பிரிட்டிஷ் படைகள் வெளியேறியதைக்குறித்து, பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பார்லிமெண்டில் சில விவரங்களைக் கூறினார். அவர் கூறியதாவது:—கிரீசிலிருந்த பிரிட்டிஷ் துருப்புகளில் முக்கால் பாகம், கிரீசைவிட்டு வெளியேற்றப்பட்டது. ஆனால் பாரமான யுத்ததளவாடங்களைத் தம்முடன் கொண்டு செல்லமுடியவில்லை. கிரீசில் பிரிட்டிஷ் படைகளில் மொத்தம் இருந்த 60,000 பேர்களில் 45,000 பேர் இம்மாதிரி வெளியேற்றப்பட்டார்கள். வெளியேறும்போது, பாதுகாப்புக்காக வேண்டிய அளவுக்கு பிரிட்டிஷ் விமானங்கள் இல்லாதிருந்தபோதிலும், இவ்வளவு பேர் சண்டையிட்டுக்கொண்டே திரும்பிவந்து சேர்ந்தது பாராட்டத்தகுந்த ஒரு காரியம்.

கிரீசில், ஒரு அடிமை அரசாங்கம் ஜெர்மனியால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தலைவராக ஜெனரல் சோலாகிக்லு என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் எபைரஸ்ஸில் கிரீசுக்குத் துரோகம்செய்து, கிரேக்க சேனையைச் சரணமடையும்படி செய்தவர்.

சட்ட ரீதியான கிரேக்க அரசாங்கம் கிரீட் தீவில் இப்போது இருக்கிறது. முன்பு ஆதன்சில் பிரிட்டிஷ் ஸ்தானீசராக இருந்த சர் மைக்கேல் பாலரட் கிரீஸ்ஸுக்குச் சௌக்கியமாக வந்து சேர்ந்தார்.

கிரீசில் ஜெர்மன் பட்டாளங்களுக்கு ஏராளமான சேதம் ஏற்படுத்தியதாக, ஜெனரல் சர்ஹுபர்ட் கவ் கூறுகிறார்.

## 5. பால்கன்ஸ்.

யூகோஸ்லாவியாவை ஜெர்மனி கைப்பற்றிவிட்டாலும், யூகோஸ்லாவியாவின் அரசாங்கத்தை, அமெரிக்கா ஒத்துக்கொண்டு ஆதரிக்கிறதென்றும், மிஸ்டர் கான்ஸ்டன்டைன் போடிஞ்சு என்பவரை யூகோவின் ஸ்தானீகராகக் கருதுகிறதென்றும், அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டல் ஹல் கூறியிருக்கிறார்.

யூகோவில் ஸ்கோபுல்ஜி என்ற இடத்தில் இருந்த போலீஸ் அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், இவர்களை நீக்கிவிட்டு, பல்கேரியர்களை அந்த இடங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

## 6. கப்பல் நிலைமை.

அமெரிக்காவின் துறைமுகங்களில் கிடக்கும் அயல்நாட்டுக்கப்பல்களைக் கைப்பற்றி உபயோகப்படுத்த பிரசிடெண்டு ரூஸ்வெல்டுக்கு அதிகாரம் கொடுக்கும் மசோதாவை, அமெரிக்க சட்டசபையின் வர்த்தகக் கப்பற் கமிட்டி ஆதரித்திருக்கிறது. அந்த மசோதாவின் வார்த்தைகளைப்பார்த்தால், அந்தக் கப்பல்களைப் பிரிட்டனுக்கு வேண்டுமானால், கொடுப்பதற்கு அதிகாரம் அளித்ததுபோலிருக்கிறது.

அமெரிக்கா கண்டத்தின் பல துறைமுகங்களில், அயல் நாட்டுக் கப்பல்கள் 160 இருக்கின்றன. அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளும்படி, அமெரிக்கப் பொருளாதார ஆலோசனைக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அந்தக் கமிட்டியில் 21 அமெரிக்க குடியாட்சிகள் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றன.

மெக்சிகோ என்ற தென்னமெரிக்க நாடு, 10 இதாலியக்கப்பல்களைக் கைப்பற்றியிருந்தது. அதற்குப் பதிலாக, இப்போது, இத்தாலி மெக்சிகோவில் 10,000 டன் எடையுள்ள மூன்று கப்பல்களைக் கைப்பற்றியிருக்கிறது.

அதிவேகமாகச் செல்லும் ‘மஸ்கிடோ போட்’ என்ற சிறுகப்பல்கள் அநேகம் பிரிட்டனுக்காக, அமெரிக்காவில் கட்டப்பட்டு வருகின்றன. 24 ‘மோடார் டார்பிடோ’ கப்பல்கள் அதிகமாகப் பிரிட்டனுக்கு வேண்டுமென்று எதிர்பார்த்து, அமெரிக்காவால் தயார்செய்யப்பட்டிருக்கின்றன.

## 7. ஜப்பானும், சீனவும்.

சீனவில் சீகியாங் பிரதேசத்தில், நிங்போவிலிருந்து பெங்வாவை நோக்கி, ஜப்பானியத் துருப்புகள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன. பெங்வாவில்தான், சீனவின் பிரதம தளகர்த்தர் சியாங்கே ஷேக் வசிப்பது.

யூகோஸ்லாவியாவில், 30,000 மக்கள் ஹிட்லருக்கு விரோதமாக கிளர்ச்சி செய்தார்களென்றும், ஒப்பந்தக் கையெழுத்துக்கு எதிரிடையாக இருந்து தமது மந்திரி பதவியை ராஜிநாமா செய்த குப்ரோலோவிச்சை அவருடைய தேர்தல் மாகாணத்தில் 10,000 மக்கள் வரவேற்று அவரைக் கொண்டாடினார்கள்.

கையெழுத்திடப்போகும் யூகோஸ்லாவியா மந்திரிகளின் மோட்டார் வண்டியை ஓட்டுவதற்கு ஒரு டிரைவரைக் கண்டுபிடிப்பது அதிக கஷ்டமாய் விட்டதாம். யூகோஸ்லாவியாவில் பொதுக் கூட்டங்கள் அனுமதிக்கப்படாதென்று உத்தரவிடப்பட்டது. போலீஸ்காரர்கள் 24-மணி நேரமும் அமைதியைப் பாதுகாக்கும் வேலையில் இருக்கிறார்களாம்.

யூகோஸ்லாவியாவின் பொதுமக்கள் அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டத்தை பலமாக ஆக்ஷேபித்தார்கள். தலை நகராகிய பெல்கிரேடில் ஒரு முக்கியமான தெருவில், ஒப்பந்தத்துக்கு எதிரிடையாக, தேசாபிமானப் பாட்டுகளைப் பாடிக்கொண்டு, மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றார்கள். ஹிட்லருடைய படம் பள்ளிக்கூடங்களில் கொளுத்தப்பட்டது; சிறுவரான பீடர் அரசரின் படம் சிகப்பு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மாட்டப்பட்டது. பானியலூகா என்ற இடத்தில் ஒப்பந்தம் சம்பந்தமாக ஒரு கலகம் நடந்தது; 14 பேர் உயிரிழந்தார்கள். அதே நாள், அதாவது புதன்கிழமை இரவு ஸ்கோபுல்ஜீ என்ற இடத்திலும் கலகம் நடந்தது. அடுத்த நாள் காலை, டெல்கிரேடுக்குச் செல்லும் 'டெலிபோன்' கம்பிகளெல்லாம் அறுபட்டன.

யூகோஸ்லாவியா அரசாங்கம் அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்பு, பிரிட்டிஷ் அரசாங்கம் கடைசியாக ஒரு எச்சரிக்கை கூறியது என்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வெளியிடப்பட்டது. நடுநிலைமையை விட்டு விட்டு, பகைவர்களுடைய திட்டத்தில் யூகோஸ்லவியா சேர விரும்புவதைக்கண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் ஆச்சரியப்படுகிறதென்றும், ஜெர்மனி யூகோஸ்லாவியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் நிலைநிற்காவென்றும், சென்ற 18 மாதங்களில் ஜெர்மனி தன் வாக்குறுதிகளைப் புறக்கணித்து நடந்து வருவதிலிருந்து, உண்மை நன்ருகத் தெரியவருமென்றும், பிரிட்டன் செய்த எச்சரிக்கையைப்பற்றி மிஸ்டர் பட்லர் கூறினார்.

புதன்கிழமை இரவு ரேடியோவில் பேசிய இந்திய மந்திரி, மிஸ்டர் அமெரி, யூகோஸ்லாவியாவின் மக்களுக்கு உணர்ச்சியுள்ள ஒரு வேண்டுகோளை விடுத்தார். அரசாங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோதிலும், தேசீய உணர்ச்சியை உயிருடன் இருக்கும்படி அவர்கள் செய்யவேண்டுமென்றும், யூகோஸ்லாவியாவின் அரசாங்கம் ஒப்பந்தத்தில கையெழுத்திடுமுன், நாட்டுமக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கவேண்டுமென்றும், அந்த ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையெழுத்திட்டதால் நாட்டுமக்கள் தங்களுடைய சுதந்தரத்தையும், மானத்தையும் அரசாங்கம் ஜெர்மனிக்கு விற்றுவிட்டதென்று கருதுவதாகவும், எது எப்படியிருந்தாலும் ஒன்றும் முழுகிப்போய் விடவில்லையென்றும், தப்பித்துக்கொள்வதற்கு இன்னும் காலம் இருக்கிறதென்றும், மிஸ்டர் அமெரி ஆத்திரத்துடன் பேசினார்.

அப்படியே, பொழுதுவிடியுமுன் யூகோஸ்லாவியா ஜெர்மனியினுடைய பிடியிலிருந்து விலகிக் கொண்டது. வியாழக்கிழமை காலை 2½-மணிக்கு ஒரு அதிதீவிர ராணுவத் தந்திர முயற்சியினால், பழைய அரசாங்கம் அகற்றப்பட்டது. முதன் மந்திரி, வெட்கோவிச்சும் இதர மந்திரிகளும் கைது செய்யப்பட்டார்கள். அரசர் பீடர், ரீஜண்ட்டை விலக்கிவிட்டு, தானே நாட்டரசாங்கத்தை மேற்கொண்டார். ஆகாயவிமானப் படைத்தலைவர், ஜெனரல் சிமோவீச்சிடம் அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை அரசர் கொடுத்திருக்கிறார். நாட்டு மக்களுக்கு விடுத்த "பிரக்ளமேஷன்" என்ற அறிவிப்பில், தான் ராஜ்ய பாரத்தை வகிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். சர்பியர்கள் குரோட்டியர்கள், ஸ்லாவியர்கள் எல்லோரும் சிம்மாசனத்தைச் சுற்றி நின்று நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஜெனரல் சிமோவீச்சின் தலைமையில் எற்படுத்தப்பட்ட புதிய அரசாங்கத்துக்கு எல்லோரும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

புதிய மந்திரி சபை பல கட்சித் தலைவர்களடங்கியது. அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திடக்கூடாது என்று சொல்லி ராஜிநாமா செய்த மூன்று மந்திரிகளும் புதிய மந்திரி சபையில் சேர்ந்திருக்கிறார்கள்.

தைரியமும் மனிதத்தன்மையும் நெருக்கடியான சமயத்தில் காட்டிய, அரசர் பீடர், சிறுவயதுடைய யூகோஸ்லாவியாவின் மன்னர், செய்த காரியத்தை எல்லோரும் பாராட்டுகிறார்கள். யூகோஸ்லாவிய மக்கள் அரசமாளிகையின் முன் ஏராளமாகக் கூடி தங்களுடைய ராஜ விசுவாசத்தைத் தெரிவித்தார்கள். பெல்கிரேடில் எங்கு பார்த்தாலும் சந்தோஷக் கொண்டாட்டங்கள் அதிகமாக நடக்கின்றன. "ஹிட்லரின் முகத்தில் கொடுத்த அடி" என்று யூகோஸ்லாவியாவின் தைரியத்தை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

வியாழக்கிழமை காலையில் லண்டனில் பேசிய பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில் யூகோஸ்லாவியாவுக்குப் பூரண உதவியை பிரிட்டன் அளிக்கும் என்று கூறினார். அமெரிக்காவும் அதேமாதிரி முழு உதவியும் அளிக்கும் என்று அமெரிக்க உதவி மந்திரி, மிஸ்டர் சம்னர் வெல்ஸ் பத்திரிகை நிருபருக்குத் தெரிவித்தார். புதிய யூகோஸ்லாவியா அரசாங்கத்துக்கு இதைப்பற்றி அறிவிக்கப்பட்டதென்றும் கூறினார்.

யூகோஸ்லாவியாவின் மாறுதலைப் பாராட்டிப் பேசிய மிஸ்டர் சர்ச்சில், யூகோஸ்லாவியா ஆத்மஞானம் அடைந்துவிட்டதாகவும், இனிமேல் பல மாதங்கள் முடிவதற்குள் அட்லாண்டிக் யுத்தம் வெற்றியுடன் முடியுமென்று தானே அறிவிக்கப் போவதாகவும் கூறினார்.

## 6. கப்பல் நிலைமை.

"பிரெமென்" என்ற பிரம்மாண்டமான ஜெர்மன் கப்பல் எரிந்துகொண்டிருப்பதை, பிரிட்டிஷ் விமானப்படையினர் புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். கப்பல் பற்றிக்கொண்ட காரணம் என்னவென்பது தெரியவில்லை என்று ஜெர்மனி கூறுகிறது. பிரிட்டிஷ் வெடிகுண்டுகள்தான் காரணம் என்பதை எடுக்கப்பட்ட புகைப்படங்கள் காட்டுகின்றன.

ஜெர்மன் சப்மரீன் முக்கிய ஸ்தானமாகிய லோரியண்டின்மேல், பிரிட்டிஷ் விமானப்படை வெடிகுண்டுகள் போட்டது. அதன் காரணமாக, ஒரு பெருந் தீ ஏற்பட்டு சில சேதங்களை உண்டாக்கியிருக்கிறது.

கப்பல் கட்டுவதற்கும், பழுதுபார்ப்பதற்கும், வேண்டிய எல்லா வசதிகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் ஏற்படுத்தியிருப்பதாக சென்ற செவ்வாய்க்கிழமையன்று கப்பல் படையின் மந்திரி, மிஸ்டர் ஏ. வி. அலெக்சாண்டர் காமன்ஸ் சபையில் கூறினார். சென்ற ஆறு மாதங்களில் இந்தியாவிலும், இதர ஏகாதிபத்திய நாடுகளிலும் செய்யப்படும் யுத்தக் கப்பல்கள் முன்பிருந்ததைவிட இரண்டுமடங்கு அதிகப்பட்டிருக்கின்றன. அதல்லாமல், அதிகப்படியான வர்த்தகக் கப்பல்கள் செய்யும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. குடியேற்ற நாடுகள், இந்தியா, இதர பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் ஆகிய இவைகளின் முக்கிய துறைமுகங்களிலெல்லாம யுத்தக் கப்பல்களைப் பழுதுபார்க்கும் வேலைக்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் கப்பற்படை வசதிகள் துரிதமாக அதிகப்படுத்தப்படுகின்றன. பனமா கால்வாயில் உள்ள கப்பல் வசதிச்சாலையை இடித்து, விசாலமாக அதைக் கட்டப்போகிறார்கள்; கட்டிய பிறகு 65,000 டன் யுத்தக்கப்பல்கள் தங்கும்படியான இடமாயிருக்கும்.

## 7. ஜப்பானும் சைனாவும்.

ஜப்பான், சீனா தேசத்துத் துருப்புகளை முறியடித்து ஒரு பெரிய வெற்றியைப் பெற்றதாக அறிவிக்கிறது. நான்சாங் என்ற இடத்தைத் தாக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட 100,000 சுங்கியாங் துருப்புகள் தோற்கடிக்கப்பட்டு, அதில் 7,600 பேர் உயிரிழந்

தார்களென்று தெரிகிறது. சியாங்கி என்ற இடத்துக்கு வட மேற்கில், ஜப்பானியர் செய்து வரும் யுத்த ஏற்பாடுகள் முடிந்துவிட்டன.

ஷாங்கை—நாங்கிங் ரயில்வேயைத் தாக்குவதற்கு, சீனத்துருப்புகள் ஹாங்கைக்கு மேற்கில் 100 மைலுக்கப்பால் இருப்பதையறிந்து, ஜப்பானியப் படைகள் அந்தப் பிரதேசத்திற்கருகில் சென்று கடுமையான போர்புரிகின்றன.

ஜப்பானியத் துருப்புகள் பெரிய தளவாடத்துடன், கொள்ளைக்காரர்களின் மறைவிடமாகிய குவாங்டங் பிரதேசத்தில் கடல் மூலமாகச் சென்று, இறங்கி இருக்கின்றன. சுவாடௌ என்ற இடத்தில் மற்றொரு படை இறங்கியிருக்கிறது.

8. விஷி.

விஷி அரசாங்கத்தில் சாதாரண பிரதிநிதியாக இருந்த, போகோமாலவ் என்ற ரஷ்யரின் அந்தஸ்து, விஷி அரசாங்கத்தாரால் ஸ்தானீகர் ('அம்பாசடர்') என்ற ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டது.

ஜெர்மனியின் ஆதிக்கத்தில் வராத பிரான்சு தேசத்துக்கு, அமெரிக்காவிலிருந்து வரும் இரண்டு கப்பல் கோதுமை மாவு, அந்தப் பிரதேசத்துக்கே அல்லாமல் வேறு பிரதேசத்துக்கு நேராகவாவது, மறைமுகமாகவாவது உபயோகப்படுத்துவதில்லை என்று விஷி அரசாங்கம் உறுதி கூறியிருக்கிறது. இந்த இரண்டு பிரெஞ்சு கப்பல்கள் போவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் சம்மதித்திருக்கிறது. கப்பல்கள் போய் சாமானை இறக்கிவிட்டு உடனே திரும்பி அமெரிக்காவுக்கு போய்விட வேண்டுமென்பது ஒரு நிபந்தனை. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் இந்த உணவுப் பொருளை பிரஞ்சு தேசத்து ஒரு பாகத்தின் மக்களுக்காக அனுப்புகிறது.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட தேசீய ஆலோசனைச் சபையில் பிரெஞ்சு வடக்காப்பிரிக்காவைச் சேர்ந்த நான்கு முஸ்லீம்களை அங்கத்தினர்களாக மார்ஷல் பீதான் நியமித்திருக்கிறார். இதில் ஒருவர் மத உபாத்தியாயர், ஒருவர் வக்கீல், மற்றொருவர் வைத்திய மருந்து விற்பவர், வேறொருவர் அல்ஜீரியாவைச் சேர்ந்த ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

பல்கேரியாவில், உணவுப் பொருள்களில்லாமல், நாட்டு மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அநேகர் மாசிடோனியாவிலிருந்து, உணவில்லாத காரணத்தால், கிரீசுக்குத் தப்பியோட முயற்சித்தார்கள். ஆனால் அவர்கள் ஜெர்மானியர்களால் கைது செய்யப்பட்டார்கள்.

10. நடுநிலைமை நாடுகள்—ஸ்பெயின், ரஷ்யா.

ஸ்பெயினினுடைய தற்போதைய நிலைமையைப் பற்றி இந்த இதழில் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் இன்றைய வாரத்தின் யுத்த நிலைமையில் ஸ்பெயின் எதுவும் செய்ய முடியாத ஒரு சங்கடத்தில் இருப்பது நன்றாகத் தெரியவரும்.

துருக்கி தேசம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டு யுத்தத்தில் இறங்கினால், ரஷ்யா நடுநிலைமை வகிக்கும் என்று ரஷ்ய அரசாங்கம், துருக்கி அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறது. ஜெர்மனியுடன் சேராமல் ரஷ்யா நடுநிலைமை வகிப்பதைப்பற்றி, துருக்கி அரசாங்கம் ரஷ்யாவைப் பாராட்டி தன்னுடைய நன்றியைத் தெரிவித்திருக்கிறது.

## ஸ்பெயினின் தற்கால நிலைமை

உள்நாட்டுச் சண்டையில் களைத்துச்சளைத்த ஸ்பெயின், ஜெனரல் பிராங்கோவின் தலைமையின் கீழ், இந்த யுத்தம் ஆரம்பித்ததும், நடுநிலைமை வகித்தது. 1939-ம் வருஷம் மேமீ, ரஷ்யாவின் பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிராக செய்யப்பட்ட 'ஆண்டி காமின்டர்ன் பாக்ட்' என்ற அச்சு ஒப்பந்தத்தில், ஜெனரல் பிராங்கோ கையெழுத்திட்டார்; ஆனால் அச்சு வல்லரசுகளிடம் ராணுவ சம்பந்தமான ஒப்பந்தம் யாதொன்றும் வைத்துக்கொள்ளவில்லை. ஜெர்மனி ரஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் அவருக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது. பிரான்சு சரணடைந்ததும், இடலி யுத்தத்தில் பிரவேசித்ததும் பிராங்கோ அச்சு வல்லரசுகளோடு ஒரு அடி நெருங்கினார்; ஸ்பெயின் நடுநிலைமை வகிப்பதோடு மாத்திரம் நிற்காமல், யுத்தத்திலேயே பிரவேசிப்பதில்லை என்ற கொள்கையைக் கொண்டதுபோல் இருந்தது. பொதுவாக இதுவரைக்கும் பிரிட்டனுக்கும், நேசப்பான்மையான நாடுகளுக்கும் எதிரிடையாக, பிராங்கோ ஒன்றும் செய்ததில்லை. இந்த வாரம், விளம்பர மந்திரி சபையின் உதவி காரியதரிசி, ஸ்பெயின் நடுநிலைமை வகிப்பதை மேலும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆனால், ஜெர்மனி ஸ்பெயினை எப்படியாவது தனக்குதவியாகவும், ஐக்கிய நேச நாடுகளுக்கு விரோதமாகவும் செய்ய அநேக பிரயத்தனங்கள் செய்துகொண்டு வருகிறது. இந்த பிரயத்தனங்கள் வீணாயின. பதினைந்து நாட்களுக்கு முன், ஸ்பெயின் பிரதேசத்தின்மேல் யுத்த ஆகாய விமானங்கள் பறப்பதற்கு ஜெர்மனி அனுமதி கேட்டதாகவும், பிராங்கோ, ஸ்பெயின் தேசத்தின் கண்ணியத்துக்கு அது பொருந்தாதென்று மறுத்து விட்டதாகவும், ஜெர்மனிக்கு இது சமபந்தமாக வாக்குறுதியளித்த பர்லினிலுள்ள தன்னுடைய ஸ்தானீகரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும், "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் ராஜதந்திர நிபுணர் கூறுகிறார். இடலி. சிசிலி தீவுகள் மூலம் ஆகாய விமான ஸ்தலங்கள் சங்கிலித் தொடர்போல ஜெர்மனிக்கு அமைந்திருக்கின்றன; அப்படியிருக்கும்போது ஜெர்மனி எதற்காக ஸ்பெயினின் உதவியைத் தேடுகிறது? லிபியாவுக்குப் புதிய வழியைத் தேடுவதாயிருக்கலாம்; அதனுடன் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரத்தின்மேல் கண் வைத்திருக்கலாம். ஒருக்கால் பிரெஞ்சு மொராக்கோவின் மேல் நோக்கம் வைத்து, சுதந்தர பிரெஞ்சு சேனைகளின் பிரதம தளகர்த்தர் ('கமாண்டரின் சீப்') ஜெனரல் வீகானை ஜெர்மனி தன் பக்கம் இழுக்க முயலுவதாயிருக்கலாம். வடக்காப்பிரிக்காவில், அச்சு வல்லரசுகள் செய்த சூழ்ச்சிகளில் ஜெனரல் வீகான் அகப்படாதிருந்தார். சமீபத்தில் பிரெஞ்சு மொராக்கோவுக்கு ஜெர்மன் நாஜிகள் அநேக ராணுவ உத்தியோகஸ்தர்களை அனுப்பியிருந்தார்கள். சமாதான கமிஷன் வேலையில் இடலிக்கு ஒத்தாசை செய்வது என்ற நோக்கத்தினமேல் இந்த உத்தியோகஸ்தர்கள் அனுப்பப்பட்டதாக இருந்தாலும், உண்மையில் பிரெஞ்சு ஆப்பிரிக்கா ஏகாதிபத்தியத்தை அழிக்க ஒரு சூழ்ச்சியாகத்தான் இருக்கும் என்று நினைக்க இடமிருக்கிறது. ஆனால், ஸ்பெயின்கூட மொராக்கோ விஷயங்களில் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. மொராக்கோ சுல்தானிடமிருந்து டாஞ்சியரைப் பிடுங்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிராங்கோவுக்கு இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். அந்த சுல்தான் தனனுடைய ராஜ்யத்தின் மேல் பிரெஞ்சு ஆதிக்கம் இருப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார். தற்போது, ஸ்பெயினுக்கும், ஜெர்மனிக்கும், மொராக்கோவைப் பிடித்துக்கொண்டு, வடக்காப்பிரிக்காவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை அழிக்கவேண்டும் என்ற பொதுவான எண்ணம் இருந்தபோதிலும், சீக்கிரமாகவாவது அல்லது பிறகாவது, இருநாடுகளுடைய நோக்கங்கள் ஒன்றோடொன்று விரோதப்பான்மை கொள்ளும்படியாய் இருக்கின்றன.

இப்போது அச்சு ஒப்பந்த நாடுகளின் நடவடிக்கைகள் முரண்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உள்நாட்டுச் சண்டையில் உதவி செய்ததற்காக, இடலிக்கு ஸ்பெயின் 275 கோடி டாலர்கள் கொடுக்கவேண்டுமென்றும், அதை 24 வருஷங்களில் கொடுத்தாக வேண்டுமென்றும், இடலி ஸ்பெயினைக் கேட்டிருக்கிறது. உள்நாட்டுச் சண்டைக்குப் பிறகு பொருளாதார நெருக்கடியிலிருந்து சமாளித்துக்கொண்டு நிற்க முயலும் ஸ்பெயினை ஏன் இடலி பணம் கொடுக்கும்படி கேட்கிறது? அதுவும் இப்போது கேட்பானேன்? இதில் ஒரு ருசிகரமான விஷயம் இருக்கிறது. மூன்றிரண்டு வாரங்களுக்குமுன் முசலோனியை இடலியில் பிராங்கோ சந்தித்தார்.

ஆப்பிரிக்காவிலுள்ள இடாலிய யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு ஸ்பெயினுடைய உதவியை இடலி நாடியதாகத் தெரிகிறது. பிராங்கோ இடலிக்கு உதவி செய்திருந்தால், ஸ்பெயினின் கடன் கொடுபட்டிருப்பதாகக் கருதப்பட்டிருக்கும்.

இம்மாதிரியாக ஜெர்மனிக்கும், இடலிக்கும் இணங்காமல் ஸ்பெயினின் நன்மையை பிராங்கோ காப்பாற்றி வருகிறார். ஸ்பெயின் எல்லை வரைக்கும் வந்து பிராங்கோவை ஹிட்லர் சில மாதங்களுக்கு முன் பார்த்தது, பிராங்கோவுக்கு ஒரு பெரிய மரியாதை செய்தது போலாகும். இருந்தபோதிலும், ஸ்பெயின் வழியாகப் போர்ச்சுகலுக்குப் போவதற்கு ஜெர்மன் சேனைகளுக்கு அனுமதி ளிக்க பிராங்கோ மறுத்துவிட்டார். முன்பு கூறியதுபோல முசலோனிக்கு உதவியளிக்க முடியாதென்று சொல்லிவிட்டார். கடைசியாக, ஸ்பெயினை ஜெர்மன் ஆகாய விமானப் படைக்கு உதவி ஸ்தலமாக இருக்கும்படி ஜெர்மனி கேட்டதையும் மறுத்து விட்டார். ஆனால் அச்சு வல்லரசுகளின் கட்டாயப் டுத்தும் வேண்டுகோளை எவ்வளவு காலம் வரைக்கும் பிராங்கோ தடுக்க முடியும் ?

ஜிப்ரால்டரையும், வடக்காப்பிரிக்காவில் உள்ள பிரெஞ்சு பிரதேசங்களையும் கைப்பற்றவேண்டுமென்பது ஸ்பெயினின் நோக்கம் ஸ்பெயின் உதவிசெய்து அச்சுவல்லரசுகள் வெற்றிபெற்றால், போர்ச்சுகலைப் பிடிப்பதற்கு அவ்வரசுகள் உதவிசெய்யலாம். பிராங்கோவுக்குச் சொந்தமாகவே சர்வாதிகாரிகள் மேல் இருக்கும் அன்பு இயற்கைதான். சர்வாதிகாரக் கொள்கையின் எதிர்கால நிலைமை, அச்சு வல்லரசுகளின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது. பிராங்கோவின் மைத்துனரும், ஸ்பெயினின் வெளிநாட்டுக் காரியதரிசியுமான சீனர் சூனர் என்பவர் ஜெர்மனி, இடலிமேல் மிகுந்த நட்புக்கொண்டவர். பிராங்கோவின் அரசியற்கட்சியான ஃலான்ஷ் என்பது அச்சுகொள்கையில் ஐக்கியப்பட்டது. மேலும், ஸ்பெயின் பத்திரிகைகள் ஹிட்லர், முசலோனி பக்கத்தில் தீவிரமாக பிராங்கோ இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றன.

ஆனால் ஸ்பெயின் பட்டினியால் கஷ்டப்படும்படியான நிலையிலிருக்கிறது. அதனுடைய பொருளாதார நிலைமை நிலைகுலைந்துள்ளது. அரசியலில் ஸ்பெயின் தேசத்து மக்கள் பலவித பிளவுகள் உடையவர்களாயிருக்கிறார்கள். உணவுப்பொருள், பணம் அல்லது வேண்டிய இதர பொருள்கள் முதலியவற்றிற்கு ஜெர்மனியையோ, இடலியையோ எதிர் பார்ப்பதற்கு முடியாது ; ஏனென்றால், அந்த நாடுகளுக்குத் தங்களுடைய யுத்த முயற்சிக்குப் பணம் சேகரிப்பதே சரியாயிருக்கும். அதல்லாமல் ஐரோப்பா கண்டம் பிரிட்டிஷ் கப்பற்படையினால் பொருளாதார முற்றுகை போடப்பட்டிருக்கிறது. இப்போது ஸ்பெயினுக்கு வேண்டிய பொருள்கள், பிரிட்டன், அமெரிக்கா இவைகளுடைய உதவியினால் வந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் செஞ்சிலுவைச் சங்கம், பிரிட்டனுடைய அனுமதியின் மேல் உணவுப்பொருள் கப்பல்களை ஸ்பெயினுக்கு அனுப்புகிறது. பிரிட்டன் 10 லட்சம் டன் கோதுமை தருவிப்பதற்கு ஸ்பெயினுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. மாங்கனீஸ் என்ற உலோகம், ஆட்டுக்கறி, பால் முதலிய சாமான்கள் ஸ்பெயினுக்குப் பிரிட்டன் அனுப்பத் தயாராயிருக்கிறது. ஸ்பெயினில் ஒரு முழு வருஷ விளைவு ஆரஞ்சுப்பழங்களை பிரிட்டன் வாங்குவதாக ஒப்பந்தம் பேசியிருக்கிறது. ஆகையால், பிரிட்டனும், அமெரிக்காவும் இதற்குப் பிரதி உபகாரமாக, அச்சு வல்லரசுகளோடு ஸ்பெயின் அதிகமாக உடந்தையாயிருக்கலாகாது என்று விரும்புகிறார்கள். கிரீசிலும், லிபியாவிலும், இடலியடைந்த தோல்விகள், நாஜிகளுடைய விமான எதிர்ப்பைப் பிரிட்டன் தாங்கி நிற்கும் தன்மை, ஜெர்மனியின் யுத்த தளவாடங்கள்மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டு போட்டு உண்டாக்கிய சேதங்கள், மத்திய தரைக்கடலிலும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும் பிரிட்டிஷ் கப்பற்படைக்கிருக்கும் ஆதிக்கபலம்—இவைகளெல்லாம் அச்சு அரசுகளின் குறைவுகளை ஸ்பெயினின் தேசீயவாதிகளுக்கு நன்றாகக் காட்டிவிட்டன. கடைசியில் சொன்ன விஷயம் ஸ்பெயின் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டியது. ஸ்பெயினுக்கு, பகைவர் தாக்குவதற்கு சௌகரியமான கரையோர எல்லைகள் உள்ளன. நார் வயில் லொபோடன் தீவுகளை பிரிட்டன் தாக்கியது ஸ்பெயினுக்கு ஒரு படிப்பினை. கடைசியாக, யுத்தத்திலிருந்து விலகி நிற்கும்படி அமெரிக்கா ஸ்பெயினுக்கு புத்திமதி கூறியிருக்கிறது.

ஆனால், ஜெர்மனி ஜிப்ரால்டரைக் கைப்பற்ற வேண்டுமென்று தீவிரமான ஆசைகொண்டிருக்கிறது. ஸ்பெயினிலுள்ள கேடிஸ்ஸிலிருந்தும், ஆப்ரிக்காவிலுள்ள செண்டாவிலிருந்தும் ஜிப்ரால்டரை ஆகாயத்திலிருந்தும், கீழிருந்து பீரங்கிகளினாலும் தாக்கலாம். ஜிப்ரால்டர் மலை இத்தாக்குதல்களையெல்லாம் தாங்கும். பிராங்கோ தயங்குவதாயிருந்தால், ஜெர்மெனி ஸ்பெயின் முழுவதையுமாவது அல்லது ஒரு பாகத்தையாவது கைப்பற்ற முடிவு செய்யலாம். மேஜர் பீல்டிங் எலியட் என்ற அமெரிக்க யுத்தசாஸ்திர நிபுணர், பால்கன் பிரதேசத்தைவிட, ஸ்பெயினில் பிரவேசித்தால், ஹிட்லருக்கு நல்ல சாதகங்கள் இருக்கின்றன என்று கூறுகிறார். பிராங்கோவினுடைய அனுமதியின்மேல் அல்லது அனுமதியில்லாமல் ஸ்பெயினையும், இடலியையும் பிடித்துக்கொண்டால், அமெரிக்க ஐக்கியநாடுகள், லாடின் அமெரிக்கா, இவைகளின் கோபத்தைக் கிளப்பி, அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள ஸ்பெயின், போர்ச்சுகல் இவைகளுக்குச் சொந்தமான தீவுகளைப் கைப்பற்றும்படி அவைகளைத்தூண்டும். ஆனால் உடனே வெற்றியடைய சாதகமிருந்தால், இந்த அபாயத்தைப்பற்றி ஜெர்மனி கவனிக்காதென்று அந்த மேஜர் நினைக்கிறார். "ஜெர்மனி கூடிய சீக்கிரம் ஜெயிக்கவேண்டுமென்று முயற்சிக்கிறது ; யுத்தம் இன்னும் இழுத்துக் கொண்டே போனால் ஜெர்மனி எப்படியும் தோல்வியடையும்" என்று அவர் கூறுகிறார்.

ஸ்பெயினிலிருந்து யுத்தம் நடத்துவதாயிருந்தால் ஹிட்லருக்கு இரண்டு யுதத அரங்கங்களில் போர் புரியவேண்டிய அவசியமில்லை ; ஸ்பெயினிலேயே ஏராளமான சேனைகள் வைத்திருக்கவேண்டியதில்லை ; ஆனால் பிரிட்டன் ஜிப்ரால்டர் மூலமாக தெற்கு ஸ்பெயினில் அல்லது வேறு துறைமுகத்தில் வேண்டிய சேனைகளைச் சேகரித்து வைத்து, ஜிப்ரால்டரைப் பாதுகாக்கலாம். 50,000 பிரிட்டிஷ் துருபபுகள் விடாப்பிடியாக நின்றால், ஜெர்மெனியர் காலந்தாழ்த்தி, அதிக செலவில் முற்றுகை போட முயற்சிக்கலாம் ; ஆனால் முடிவில் வெற்றி காண்பது முடியாது. ஏனென்றால் பட்டினிகிடந்து வருந்தி, ஜெர்மனியின் வெடி குண்டுகளால் தம்முடைய உற்றார் உறவினரை யிழந்த ஸ்பெயின்மக்கள், ஜெர்மனிக்கு விரோதமாகக் கலகம் விளைவித்து, ஜெர்மன் துருப்புகள் செல்லும் பாதைகளையும், பொருள்கள் வரும் பாதைகளையும் பாழாக்கி யுத்த முயற்சியை வீணாக்கலாம். அமெரிக்க நிபுணர் பழைய சரித்திர சம்பவங்களை நினைவுக்குக் கொண்டுவரலாம். ஒன்றரை நூற்றாண்டிற்குமுன், ஸ்பெயினில் பிரெஞ்சு சேனையின் கதி என்னவாயிற்று ? டாரஸ் வெட்ரஸ் சண்டைக்குமுன், நாட்டை உணவுப்பொருள் இல்லாமல் துடைத்துவிட்டு சண்டைக்குச் சென்ற மசீனாவின் துருப்புகள் எந்தக் கதியிலிருந்தன ? ஸ்பெயினில் நெப்போலியனுக்கு நேர்ந்த கஷ்டங்கள்தான் முடிவில் வெல்லிங்டனை வெற்றிபெறச் செய்தன. வெற்றிபெறவேண்டும் என்ற பேராசையுடன் வந்த நெப்போலியன் அழிந்ததுபோல ஹிட்லருடைய பேராசையும் அழிந்தால், சரித்திரம் பழைய பாடத்தை ஒப்பித்ததாகும்.

### பொருளாதார முற்றுகையும், பிரான்சுக்கு உணவுப்பொருள் அனுப்புதலும்.

ஐரோப்பாவில் ஜெர்மனிக்கும், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளுக்கும் வெளியிலிருந்து உணவுப் பொருள்கள், இதர சாமான்கள் முதலியன வருவதை, பிரிட்டிஷ் கப்பற்படை தடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால் இப்போது பிரான்சுக்காக இரண்டு கப்பல் கோதுமை மாவு அனுப்பப்

பட்டதைப் பிரிட்டன் அனுமதித்திருக்கிறது. இதைப் பற்றி, பிரிட்டன் செய்தகாரியம் சரியானதா என்ற கேள்வி எழுகின்றது. இரண்டு கப்பல் மாவும் பிரெஞ்சு மக்களுக்கு அமெரிக்காவால் அனுப்பப்பட்ட ஒரு நன்கொடை; இது சரியாக வினியோகம் செய்யப்படுகிறதா என்பது அமெரிக்காவின் செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் இருக்கிறது; இருந்த போதிலும், பிரிட்டன் தன்னுடைய பொருளாதார முற்றுகையை தளர்த்தியது நல்லதா? விஷியிலிருந்துவந்த ஒரு செய்தியிலிருந்து, பிரான்சின் பொருளாதார நிலைமை கவலைக்கிடமானதாயிருக்கிறதென்றும், முக்கியமாக கோதுமையும், இதர தானியங்களும் கிடைக்காமல் நாட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களென்றும் தெரிகிறது. பிரான்சில் இம்மாதிரியான நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது? பிரான்சில் உணவுப் பொருள்கள் விளையும் செழிப்பான பிரதேசத்தில் மூன்றில் இரண்டுபாகம் ஜெர்மன் நாஜிகள் தங்களுடைய சொந்த உபயோகத்துக்காக பிரயோசனப்படுத்துகிறார்கள். இந்த உணவுப்பொருள் திருட்டு வியாபாரம் மாமூலாக நடந்து வருவதால், பிரெஞ்சு மக்கள் உணவின்றி வருந்துகிறார்கள்.

இந்த விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் போது, சிலமுக்கியமான விஷயங்களை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். முதலாவது, ஜெர்மனி பிரவேசித்த நாடுகளில் மக்களுக்கு உணவுப்பொருள்கள் குறைந்துபோய்விட்டால், அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு ஜெர்மனியுடையதுதான். இரண்டாவதாக, ஹிட்லரின் கைதி போல் இருக்கும் விஷி அரசாங்கம், பிரான்சுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களை ஜெர்மனி திருட்டுத்தனமாக சுவாதீனம் செய்வதைத் தடுத்து, தன்னுடைய வாக்குறுதியைக் காப்பாற்றுவது முடியாதகாரியம். மூன்றாவதாக, பிரிட்டன் பொருளாதார முற்றுகையினால் ஜெர்மனியின் கழுத்தைப்பிடித்திருக்கிறது; அப்படிப் பிடித்த பிடியை விடாமலிருந்தால் தான் நல்லது. உண்மையில், அந்தப் பிடியின் வலிமையை இன்னும் அதிகப்படுத்தவேண்டும்; அப்படிச் செய்தால்தான் ஜெர்மனிக்குக் கஷ்டம் ஏற்படும்; ஐரோப்பாவிலுள்ள ஆயிரக் கணக்கான மக்களுடைய உயிரையும் காப்பாற்றியதாகும்.

இப்போது வட ஆப்பிரிகா பிரான்சுக்கு ஏராளமான பருப்பு, பழம், எண்ணெய் விதை, ‘பாஸ்பேட்’ உப்பு முதலிய பொருள்களை அனுப்பிக்கொண்டிருக்கிறது. ஜெர்மனி பிரவேசிக்காத பிரான்சின் ஒரு பாகத்திற்கும், ஆப்பிரிக்கா குடியேற்ற நாடுகளுக்கும் கப்பல்கள் போய் வருவதை பிரிட்டன் அனுமதித்துக்கொண்டு வருகிறது. ஆனால், மார்சேல் என்ற பிரெஞ்சு துறைமுகப் பட்டண அதிகாரிகளை, அச்சு அரசுகளின் கூட்டுக் கமிட்டி தன் கைவசத்தில் வைத்திருப்பதாகவும், அந்தத் துறைமுகத்துக்கு அனுப்பப்படும் பொருள்கள் தொடர்ச்சியாக இடலிக்கும், ஜெர்மனிக்கும் அனுப்பப்படுவதாகவும் தெரியவருகிறது. டாக்டர் கோப்பல்ஸ் என்ற ஜெர்மனியின் பிரசார மந்திரி, வழக்கம் போல, சமயத்திற்கு தகுந்த மாதிரி பேசுவதை இந்த விஷயத்திலும் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு தடவை, ஐரோப்பாவுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் இருப்பதாக, ஜெர்மன் ரேடியோ கூறிற்று. மற்றொரு தடவை ஜெர்மனி பிரவேசித்த நாடுகளில் உணவுப் பொருள்கள் குறைவாக இருப்பதற்கு ஜெர்மனி ஜவாப்தாரியல்லவென்று கூறியிருக்கிறது. ஆனால் இப்போது வேறுவிதமான தந்திரம் செய்ய ஆரம்பித்திருக்கிறது. அதாவது, விஷி அரசாங்கத்துக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் சண்டை மூட்டி விடுவது. பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகை கடினமாக இருப்பதாகவும், பிரான்சில் இப்போது மக்கள் உணவில்லாமல் கஷ்டப்படுகிறார்களென்றால், அதற்குக் காரணம் பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகைதானென்றும் இப்போது ஜெர்மனி கூறிக்கொண்டு வருகிறது. ஜெர்மனியின் கட்டாயத்துக்குட்பட்டு, பிரெஞ்சு கப்பற்படைத் தலைவர் அட்மிரல் டார்லான் தன் பிரஞ்சு கடற்படையை உணவுப் பொருள்கள் முதலியன கொண்டு வரும் கப்பல்களுக்குப் பாதுகாப்புத் துணையாக உபயோகிக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்.

இந்தப் பிரச்சினை கஷ்டங்கள் நிரம்பியுள்ளதாய் இருக்கிறது. மிஸ்டர் வர்னன் பார்ட்லெட் என்பவர் இந்த நிலைமையில் இரண்டு வழிகள் உள்ளன என்று கூறுகிறார். முதலாவது ஜெர்மனி தாக்குப் பிடிக்கும் தன்மைக்கு உதவி செய்துகொண்டு வந்தால், பிரிட்டன் தன் தற்கொலைக்கு வழி செய்வது போலாகும். பிரிட்டன் எங்கேயாவது ஒரு கோடுபோடவேண்டும். ஸ்பெயினில் உள்ளதுபோல பிரிட்டனும், அமெரிக்காவும் சேர்ந்த கமிட்டி, உணவுப் பொருள்களை பிரான்சில் வினியோகம் செய்வதற்கு விஷி அரசாங்கம் ஒப்புக்கொள்ளவேண்டும். இரண்டாவது, விஷி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தான் எந்த நிலைமையிலிருக்கிறது என்பதை அறியவேண்டும். மிஸ்டர் வர்னன் பார்ட்லெட் கூறுவதாவது :—

“இப்போது மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள காசபிளான்கா அல்லது டாக்கர் என்ற துறைமுகம் ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்தால், பிரிட்டனுக்கு, வாடகை—கடன் மசோதாவின்படி, அமெரிக்கா உதவி அனுப்புவதைத் தடுத்து சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்தலாம்”.

“அட்மிரல் டார்லான் இப்போது போய்க்கொண்டிருப்பதுபோல போய்க்கொண்டேயிருந்தால், இந்த துறைமுகங்களும், பீசர்ட்டாவும் அதுபோன்ற மத்தியதரைக் கடல் துறைமுகங்களும், வடக்காப்பிரிக்காவில் ஆகாய விமானங்கள் இறங்குவதற்குச் சௌகரியமான இடங்களும், கூடிய சீக்கிரம் ஜெர்மன் கொடியின்கீழ் வரும்படியான நிலைமை ஏற்படும். ஆகையால், மார்ஷல் பீதான், அட்மிரல் டார்லான், ஜெனரல் வீகான் ஆகிய பிரெஞ்சுத் தலைவர்களுடைய எதிர்கால எண்ணங்கள் என்னவென்பதை முக்கியமாக அறிந்து, அதன்பின் எந்த விதமாக நடக்கவேண்டுமோ, அந்த விதமாக நடப்பது மிகவும் அவசியம்”.

## பிரிட்டனுக்கு உதவி.

அமெரிக்காவின் மேல் சபையான செனட், 700 கோடி டாலர் யுத்த சம்பந்தமான செலவுக்காக ஒதுக்கிவைக்கும் மசோதாவை நிறைவேற்றிவிட்டது. அமெரிக்காவின் அரசாங்கம் இப்போது பிரிட்டனுக்கு வேண்டிய உதவியை எவ்வளவு சீக்கிரமாகவும், துரிதமாகவும் அனுப்பவேண்டும் என்பதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது. அடுத்த 18 மாதங்களுக்குள் 20,000 ஆகாய விமானங்கள் பிரிட்டனுக்காகச் செய்யப்படுமென்றும், அமெரிக்கா கப்பல் கட்டும் சாலைகளில் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் ரிபேர் அல்லது பழுதுபார்த்துக்கொள்ள சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும், 400 வர்த்தகக் கப்பல்கள் செய்வதற்கு உத்தரவுகள் சீக்கிரம் கொடுக்கப்படுமென்றும், அட்லாண்டிக் கடல் யுத்தத்தில் ஜெர்மன் சண்டைக் கப்பல்கள், சப்மரீன்கள், ஆகாயவிமானங்கள் முதலியன சுறுசுறுப்பாயிருந்தாலும், யுத்த உதவிகள் பிரிட்டனுக்குப் போய்ச் சேரும்படி அமெரிக்கா முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதென்றும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இப்படிப்பட்ட உதவிகள் அனுப்பும்போது அவைகளை கடைசி வரையில் பாதுகாக்க, கான்வாய் என்ற பாதுகாப்புக் கப்பல்களை அனுப்புவதைப்பற்றி அமெரிக்காவில் பேசப்படுகிறது. வாடகை — கடன் சட்டம், பாதுகாப்புக் கப்பல்களை அனுப்புவதற்கு பிரசிடெண்டு ரூஸ்வெல்ட்டுக்குத் தனியாக அதிகாரம் கொடுக்கவில்லை; இருந்தபோதிலும், சட்ட பூர்வமாக கடற்படையை அம்மாதிரி உபயோகிப்பதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறது.

பிரிட்டன்உதவிச் சட்டம் நிறைவேற்றப்பட்டபடியால் இனிமேல் உணவுப் பொருள், ஆகாய விமானங்கள், வெடிகுண்டு சாமான்கள் அனுப்பிக்கொண்டே இருப்பது தவிர, வேறுவேலை இல்லை என்று சிலர் உற்சாகத்துடன் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஒரு விஷயம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். பிரிட்டனுக்கு உதவி செய்யவேண்டுமென்று

பிரசிடெண்டுக்கு எவ்வளவு ஆசையிருந்தாலும், அமெரிக்காவைப் பாதுகாக்கவேண்டிய யுத்த தளவாடங்களை பிரித்துக்கொடுக்க அவரால் முடியாது. சப்மரீன்களை வேட்டையாடிப் பிடிப்பது, உணவுப் பொருள்கள், யுத்த சாமான்கள் அனுப்புவது முதலியவற்றிற்கு, ஒரு அளவுக்கு மோட்டார் டார்பிடோ என்ற நீர்க்குண்டு கப்பல்களும், வர்த்தகக் கப்பல்களும் அமெரிக்கா கொடுக்கமுடியும் ; ஆனால் ஏராளமான அளவுக்கு இவைகளை கொடுக்க முடியாது. அட்லாண்டிக் மகா சமுத்திர யுத்தத்தில், அமெரிக்கா பிரிட்டனுக்குக் கட்டாயம் உதவி செய்யும் என்று எதிர்பார்க்கலாம் ; ஆனால் அமெரிக்காவின் மகத்தான தொழிற்சாலை வசதிகள், பிரிட்டனுடைய உதவிக்கு உபயோகப்படுவதற்கு இன்னும் கொஞ்ச காலம் செல்லவேண்டும்.

" பாங்கர் " என்ற பிரிட்டிஷ் சஞ்சிகை சமீபத்தில் அமெரிக்காவின் யுத்த தளவாட நிலைமையைப் பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதில் கூறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :—

" அமெரிக்கா 1941-ம் ஆண்டு ஏராளமான தொகையை செலவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது பிரிட்டன் இப்போது எந்த அளவுக்கு செலவு செய்கிறதோ, அதே அளவுக்கு அமெரிக்கா செலவு செய்கிறது. பிரிட்டன் அமெரிக்காவிடமிருந்து அதில் பாதி உதவியைப் பெற்றாலும், பிரிட்டனுடைய யுத்த முயற்சி அரை மடங்கு அதிகப்பட்டு, ஜெர்மனியின் பொருளாதார முயற்சியின் அளவுக்கு மேல் போய்விடுமென்று கூறலாம். அமெரிக்காவுக்கு 1942-ம் ஆண்டு நேரும் அதிகமான செலவு, பிரிட்டனுக்கு யுத்தம் ஆரம்பித்த முதல் ஒன்பது மாதங்களில் ஆன செலவு எவ்வளவு கஷ்டங் கொடுத்ததோ அவ்வளவு கஷ்டம் தான் அமெரிக்காவுக்கும் கொடுக்கும். இதுவரைக்கும் உபயோகப்படுத்தப்படாத அமெரிக்காவின் பொருளாதார வசதிகள் ஏராளமாயிருக்கின்றன. அவைகள் உபயோகப்படுவதற்கு முன்பே, ஜெர்மனி இப்போது களைத்து நிற்கிறது. 1941-ம் ஆண்டு ஆரம்பவரைக்கும், மிஸ்டர் மார்கென்த்தோ கணக்குப்படி, பிரிட்டன் 33 கோடி பவுன் விலையுள்ள சாமான்களை அமெரிக்காவிடமிருந்து பெற்றது—அதாவது பிரிட்டனிலேயே செய்த பொருள்களுக்கு கால் பங்குக்கும் குறைவானது. 1941 ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் பிரிட்டனுக்குள்ள யுத்த வசதிகள் அமெரிக்காவின் உதவியினால் பலப்படும். அமெரிக்காவிலிருந்து முழு வருஷத்திற்கும் பெறப்படும் உதவி, பிரிட்டனில் செய்யப்படுவதில் மூன்றில் ஒரு பாகம் இருக்கும். பிரிட்டனில் இப்போது வெகு விரைவாக யுத்தத் தொழிற்சாலைகள் வேலை செய்கின்றன. 1942-ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து வருவது பிரிட்டனில் செய்யப்படுவதில் கட்டாயம் பாதி இருக்கும். 1943, 1944 வருஷங்களில், யுத்தம் நடந்துகொண்டே இருந்தால், அமெரிக்கா, உலகத்திலுள்ள வல்லரசுகளை விட அதிகமாக யுத்த சாமான்கள் செய்யும். அப்போது பிரிட்டன் எவ்வளவு தனக்காகச் செய்துகொள்ளுகிறதோ, அவ்வளவு யுத்த சாமான்கள் அமெரிக்கா அதற்கு அனுப்பமுடியும்."

## யூகோஸ்லாவியாவும் அச்சு ஒப்பந்தமும்.

யூகோஸ்லாவியா, சர்வாதிகாரிகளின் அச்சு ஒப்பந்தத்தில் சேருமா, சேராதா என்ற விஷயம் ஒரு வாரம் வரைக்கும் வதந்திகளுக்கும், சந்தேகங்களுக்கும் இடமாயிருந்தது. முடிவில் ஜெர்மனி, இடலி, ஜப்பான் அச்சு ஒப்பந்தத்தில் யூகோஸ்லாவியா கையெழுத்திட்டு விட்டது. கையெழுத்திடும் சடங்கு வியன்னாவில் நடைபெற்றது. ரிப்பன்தார்ப் ஜெர்மனிக்கும், சியானோ இடலிக்கும், ஜெனரல் ஓஷிமா ஜப்பானுக்கும் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். யூகோஸ்லாவியாவின் முதன் மந்திரி வெட்கோவிச், அயல்நாட்டு மந்திரி மார்க்கோவிச், இவ்விருவரும் யூகோஸ்லாவியாவின் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். ஹிட்லர் யூகோஸ்லாவியாவின் தலைவர்களைச் சந்திப்பதற்காகவே வியன்னாவுக்குப் போனதும், மற்றொரு ராஜதந்திர வெற்றியை ஜெர்மனியடைந்ததையும் பற்றி ஜெர்மன் ரேடியோ விளம்பரப்படுத்திக்கொண்டது.

சாதாரணமாகப் பார்த்தால், யூகோஸ்லாவியா செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றும் பயப்படும்படியானதல்ல ; ஆனால் பின்பு ஜெர்மனி வேறுபல உரிமைகளைக் கைக்கொள்ளுவதற்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் சௌகரியங்கள் ஏற்படும். கையெழுத்திட ஒப்புக்கொள்ளாது ராஜிநாமா செய்த சர்பிலன் மந்திரிகளுக்குப் பதிலாக, ஊர்பேர் தெரியாத இரண்டு பேரை மந்திரிகளாகப் போட்டு, யூகோஸ்லாவியா அரசாங்கம் ஒற்றுமையாக ஒப்பந்தத்தில் கையெழுத்திடமுடிவு செய்தது என்ற ஏமாற்றத்தை முதன்மந்திரி செய்தார். ஒப்பந்தத்திற்கு பிறகு பொதுக் கூட்டங்கள் கூட்டக்கூடாதென்று உத்திரவிடப்பட்டது. ராணுவ ஓய்வு பெற்றுக்கொண்டவர்கள் திரும்பி வரும்படி உத்தரவிடப்பட்டார்கள். சேனைகளை ராணுவச் சாலைகளில் தயாராக இருக்கும்படி கட்டளையிடப்பட்டது. ஏனென்றால், நாடு முழுவதும் மக்கள் கொந்தளிப்புடன் இருக்கிறார்கள். அரசகுமாரர் பால் ரேடியோவில் பேசப்போவதாக இருந்த நிகழ்ச்சியைத் தள்ளி வைக்கும்படி நேர்ந்தது. பொது மக்களின் தலைவர்கள் ஒப்பந்தத்தை அழிப்பதென்றும், அதைச் செய்தவர்களைத் தேர்தல்களில் தோற்கடிப்பதென்றும் ஜெர்மனிக்கு வேறுவிதமான கொள்கையைக் காண்பிப்பதென்றும், கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படியே செய்தார்கள். சாந்தமானதும் ஆச்சரியகரமானதுமான ஒரு ராணுவ சம்பவம் திடீரென மார்ச்மீ 27உ பெல்கிரேடில் நடைபெற்றது. இளவரசர் பீடர் ராஜ்யபாரத்தைத் தானே எடுத்துக்கொண்டு, ஸெர்பியன் ராணுவ வீரரான ஜெனரல் சிமோவிட்ச்சினிடம் நாட்டை பாதுகாக்கும் பொறுப்பைவிட்டார். மூத்த ரீஜெண்டான பிரின்ஸ் பால் தமது மனைவியுடன் ஓடிவிட்டார்; ரீஜென்ஸி சபையைச்சேர்ந்த இதர மெம்பர்களும் ராஜிநாமா செய்தார்கள். அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதன் மந்திரி வெட்கோவிட்சும் இதர மந்திரிகளும் கைது செய்யப்பட்டார்கள் இந்த அற்புதமான நிகழ்ச்சிகள் ஹிட்லரை ஒரு குலுக்கு குலுக்கியிருக்கவேண்டும். மேலும் தேசமுழுதும் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

பிரிட்டனின் சார்பாக வின்ஸ்டன் சர்ச்சிலும் ஐக்கிய அமெரிக்காவின் சார்பாக ஸம்னர் வெல்லஸும் யூகோஸ்லாவியாவில் நடக்கும் புரட்சியை வரவேற்றினார்கள் ; மேலும் அவர்கள் யூகோஸ்லாவியா விரோதிகளால் தாக்கப்பட்டால், முழு உதவி அளிக்கப்படுமென்றும் உறுதி கூறியிருக்கிறார்கள்.

ஹிட்லர் இந்த ஒப்பந்தத்தைப் பற்றி மிகுந்த மகிழ்ச்சி கொண்டதாகத் தெரியவில்லை. அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இதர நாடுகளை ராணுவ சம்பந்தமான நிபந்தனைகளுக்கு ஒப்பும்படி செய்த ஹிட்லர், யூகோஸ்யாவியாவை மாத்திரம் அப்படிப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுத்த முடியவில்லை. யூகோஸ்லாவியா முதல் மந்திரி கையெழுததிடுவதற்கு முன்பு, ஜெர்மனியின் அயல் நாட்டு மந்திரி ரிப்பன்தார்ப், எழுதிக் கையெழுத்திடப்பட்ட இரண்டு வாக்குறுதிகளை வாங்கிக் கொண்டார். யூகோஸ்லாவியாவின் சுதந்தரத்தை மதிப்பதாகவும், அந்நாட்டு வழியாக யுத்த காலத்தில் துருப்புகளை அனுப்புவதில்லை என்றும் கொடுக்கப்பட்ட இவ்வாக்குறுதிகள் எத்தனை நாட்களுக்கு இருக்கும் ? ஹிட்லர் வாக்குறுதிகள் கொடுப்பது, அவைகளை உடைப்பதற்கே என்று உலகம் அறியும்.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவு செய்து ஒன்றின்கீழ் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.